சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - மறைந்த மூத்த தமிழறிஞர் தேவநேயப் பாவாணரின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்குதல் - தேவநேயப் பாவாணரின் மரபுரிமையருக்குக் காப்புத் தொகை ரூ 20 இலட்சம் ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

## தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை

அரசாணை (நிலை) எண். 167    நாள்: 23.8.1996

9293    படிக்க:-

1. திரு. தே. மணிமன்றவாணன் (மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் மகன்) மடல் நாள்: 21.6.96.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித எண். ந2/6906/96 நாள்: 2[illegible].7.96.

---

ஆணை:

மொழி ஞாயிறு எனத் தமிழ் நெஞ்சங்களால் புகழப்பட்டவரும், தனித் தமிழ் இயக்கத் தலை நாயகரும், அரசின் அகரமுதலித் தயாரிப்பைத் தொடங்கிட வழி நின்றவருமான பழுத்த பெருந்தமிழ்ப் பெருமகனார் மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்களின் அரிய நூல்களை அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்திற்குக் காப்பு நிதி வழங்கவும் ரூ 20 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க, மறைந்த மூத்த தமிழறிஞர் தேவநேயப் பாவாணரின் மகன் திரு. தே. மணிமன்றவாணன் அவர்கள் அரசுக்குச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தினை அடிப்படையாகக்கொண்டு தமிழ் வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ள குறிப்புரையின் அடிப்படையில் திரு. தேவநேயப்பாவாணர் அவர்களால் எழுதப்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டம் நேசமணி பதிப்பகம் மற்றும் சென்னையிலுள்ள திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த கழகப் பதிப்பகம் ஆகியவற்றின் மூலம் வெளியிடப்பட்டுள்ள அனைத்து நூல்களையும் திரு. மணிமன்றவாணன் அவர்களிடமிருந்து பெற்று, அனைத்தையும் நாட்டுடைமையாக்கி அதற்கீடாகக் காப்புத் தொகையாக ரூ 20 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

4. மறைந்த தமிழறிஞர் தேவநேயப்பாவாணரின் அனைத்து நூல்களையும் நாட்டுடைமையாக்கப்பட்டதன் பொருட்டு அதற்கீடாக காப்பு நிதியாக வழங்கப்படும் தொகை ரூ 20 இலட்சத்தை சமபங்காகப் பிரித்து (அதாவது ஆறு பங்காக) ஒரு பங்குத் தொகையினை பாவாணர் அவர்களின் முதல் மனைவியின் மரபுரிமையரான திரு. [illegible] மற்றும் அவரது உடன்பிறப்புகளுக்கும், எஞ்சிய ஐந்து பங்கு தொகையினை இரண்டாவது மனைவியின் மரபுரிமையரான திரு. நச்சினார்க்கினியநம்பி, (மரணமடைந்ததால் அன்னாருடைய வாரிசுகள் மகன், மகள் உள்ளனர்) திரு. செல்வராசு, திரு. அடியார்க்கு நல்லான், திருமதி. மங்கையர்க்கரசி மற்றும் திரு. மணிமன்றவாணன் ஆகியோர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

தொ.2.

5. மறைந்த முத்த தமிழறிஞர் தேவநேயப் பாவாணரின் அனைத்து நூல்களும் நாட்டுடைமையாக்கப்பட்டதன் மூலம், நாட்டுடைமையாக்கப்பட்டு அவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து அனைத்து நூல்களும் அரசையே சாரும். இதுகாறும் வெளிவராத தேவநேயப்பாவாணரின் நூல்களைப் புதிதாக வெளியிட முதலிலேயே அரசின் முன்னிசைவைப் பதிப்பாளர்கள் பெற வேண்டும்.

6. இதற்கான செலவினம் கீழ்க்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக்கல்வி- 05 மொழி வளர்ச்சி-800 ஏனையச் செலவு- எட்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்-11 மாநிலத் திட்டம் ஜெ-தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியன-09 உதவி மானியங்கள் -8 ஏனைய வெகுமதிகள் ( த.தொ.கு. 2202 05 800 ஜெஜ 0988)

7. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையைப் பெற்று அதனை மேலே பத்தி 4-ல் குறிப்பிடப்பட்ட மறைந்த முத்த தமிழறிஞர் தேவநேயப்பாவாணர் அவர்களின் மரபுரிமையாளர்களுக்குக் காசோலை மூலமாக வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. 1996-97 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி இயக்குநரால் சரிக்கட்டப்பட வேண்டிய பட்டியல் எவையேனும் நிலுவையிலிருப்பின் அவற்றைப் பொருட்படுத்தாமல் இச்செலவினத்திற்குரிய பட்டியலை உடன் அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை-79 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இச்செலவினத்திற்காகும் கூடுதல் நிதியொதுக்கீட்டினை 1996-97-ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு/ மாற்றியமைக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் பெற்றுக்கொள்ளத் தக்க நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளுமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.409/கசெ/96, நாள்:22.8.96-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

வெ. பழனிச்சாமி,
அரசின் செயலாளர்

பெறுநர்.

திரு. தே. மணிமன்றவாணன்,
767-அ, இராமசாமி முதலியார் சாலை,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600078
சம்பந்தப்பட்ட நபர்கள்.
(மணிமன்றவாணன் மூலமாக)
தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொ.)
குறளகம், சென்னை-108
மாநில கணக்காய்வுத் தலைவர்,
சென்னை-18/35
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு),
சென்னை-79

நகல்:
நிதித்துறை, சென்னை-9
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை,
சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை-9
கல்வியமைச்சரின் மக்கள் தொடர்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-9
நிதிச் செயலாளரின் தனிச் செயலர்,
சென்னை-9
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலாளரின்
தனிச் செயலாளர், சென்னை-9
உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது// பா. சிவா [signature]
பிரிவு அலுவலர்